# ஓசூர் மாநகராட்சி அலுவலகம்
# கிருஷ்ணகிரி மாவட்டம்

ந.க.எண். 0276/2024/அ3 நாள்: /07/2026

**தமிழ்நாடு நகர்புர உள்ளாட்சி அமைப்பு விதி 2023 பிரிவு 316ன் ( 4) (5) ன் கீழ் விளம்பரம் செய்யப்படுகிறது.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஓசூர் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய நகராட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று அடுக்குகள் கொண்ட புதிய வணிக வளாகம் SHOPPING COMMERCIAL COMPLEX MALL WITH 3 FLOOR–னை பொதுமக்களின் பயன்பாட்டிற்க்கு விட உத்தேசிக்கப்பட்டு அட்டவணையில் குறிப்பிட்டுளள விவரப்படி ஒப்பந்தப்புள்ளி மூன்றாண்டு ஆண்டுக் குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விட இணைய தளம் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையாளரால் வரவேற்கப்படுகிறது. குத்தகை இனங்களுக்கு https://tntenders.gov.in என்கிற இணைய தளத்தின் மூலமாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் 13/08/2026–ம் தேதி காலை 11.00 மணிக்கு மாநகராட்சியின் மைய அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு அன்றே 13/08/2026–ம் தேதி ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1 | ஏல/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொரு வணிக வளாக கட்டிடம் – BLOCK கடைக்கும் தனித்தனியாக https://tntenders.gov.in இணைய தளம் அடிப்படையில் அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு முன் பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு முன் பணம் செலுத்தாதவர்கள் ஒப்பந்தப்புள்ளி / ஏலம் நிராகரிக்கப்படும். |
| 2 | ஏல/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஏலம் கோரும் ஒவ்வொரு இனத்திற்கும் (வணிக வளாக கட்டிடம்–BLOCK) அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு சொத்து மதிப்பு சான்று 2026–ஆம் ஆண்டின் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் (சொத்து மதிப்பு இல்லாவிட்டால் அட்டவணையில் குறிப்பிட்ட கூடுதலான வைப்புத் தொகை முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.) மற்றும் வில்லங்க சான்று ஒப்பந்தப்புள்ளியுடன்இணைக்கப்பட வேண்டும். |
| 3 | சொத்து மதிப்பு சான்று அல்லது அதற்கு இணையான தொகை செலுத்தாதவர்கள் ஒப்பந்தப்புள்ளி /ஏலம் ஏற்கப்படமாட்டாது. |
| 4 | ஏல/ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்பவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் (வணிக வளாக கட்டிடம் –BLOCK)–தனித்தனியாக / சொத்து மதிப்பு சான்று அதற்கு இணையான வைப்புத் தொகை தனித்தனியாக பதிவேற்றம் செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| 5 | ஏலத்திற்கும், ஒப்பந்தப்புள்ளிக்கும், தனித் தனியாக சொத்து மதிப்பு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 6 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், ஏலம் முடிவடைந்தவுடன் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். |
| 7 | குத்தகை உரிம காலம், குத்தகை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளாகும். |
| 8 | ஒப்பந்தப்புள்ளிகள் / படிவங்களை மாநகராட்சி https://tntenders.gov.in/ இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 9 | நகர்ப்புற ஊராட்சி அமைப்புகளால் நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச குத்தகை/உரிமைத்தொகை விட 100 சதவீதத்திற்கும் கூடுதலாக குத்தகை/உரிம இனங்களுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் 151% முதல் 250% வரை கோரும் நிலையில் வைப்புத் தொகையை 2 மடங்காகவும் 250% முதல் கோரும் நிலையில் வைப்புத் தொகை 2 மடங்காகும், 250% முதல் 350% வரை கோரும் நிலையில் 3 மடங்காகவும், ஒவ்வொரு கூடுதல் 100 சதவீதத்திற்கும் ஒரு மடங்கு வைப்பு தொகை உயர்த்தி கூடுதல் வைப்புதொகை நிர்ணயம் செய்யலாம். அனைத்து குத்தகை இனங்களுக்கும் பெறப்படும் வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை ஆகியவற்றிற்கு 50 சதவீதத்திற்கும் மிகாமல் உள்ள தொகைக்கு சொத்து மதிப்பு சான்று (Property Solvencey Certificate) பெறுவதற்கு பதில், வங்கி உத்திரவாத சான்றிதழ் (Bank guarantee Certificate) வழங்க வேண்டும், |
| 10 | இது தொடர்பான மற்ற விவரங்களை மாநகராட்சி அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களிலும், வேலை நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். |
| 11 | ஒசூர் மாநகராட்சி ஆணையாளருக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ முழு அதிகாரமுண்டு. |
| 12 | ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் கட்டாயமாக<br>1. புகைப்படத்துடன் கூடிய ஆதார் அட்டை ஜெராக்ஸ்<br>2. வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை ஜெராக்ஸ்<br>3.வங்கி கணக்கு புத்தக முதல் மற்றும் கடைசி பக்க நகல்<br>4, குடும்ப அட்டை நகல்<br>5.GST சான்று (உள்ளவர்கள் மட்டும்). |
| 13 | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி எடுக்கப்படும் வணிக வளாக கட்டிடம்–BLOCK–க்கிற்கு ஓராண்டு வாடகை முழுமையாக செலுத்திய பின்பே ஒப்படைக்கப்படும். |
| 14 | குத்தகை இனத்திற்கு குத்தகை உரிமம் கிடைக்கப் பெறாதவர்களின் முன்வைப்புத் தொகை, உச்சக் கேள்வித் தொகை கோரியவர்களின் உரிமத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டபின்னர் தான் திருப்பித் தரப்படும். |
| 15 | ஏலமானது மாமன்றத்தின் முடிவிற்குட்பட்டது. |

| | |
|---|---|
| 16 | மாநகராட்சி மற்றும் மன்றம் அவ்வப்போது மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கும். முடிவுகளுக்கும் மற்றும் உத்தரவுகளுக்கும் குத்தகைதாரர் கட்டுப்பட்டவராவார். |
| 17 | எவ்வித காரணமும் தெரிவிக்காமல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்யவோ அல்லது ஒத்திவைக்கவோ ஒசூர் மாநகராட்சி ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. ஏலக்கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும் மாற்றுவதற்கும் ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்க ஏலத்தில் கலந்து கொள்பவர்களுக்க எவ்வித அதிகாரம் இல்லை. |
| 18 | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வோர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய எவ்விதமான நிலுவையும் இருத்தல் கூடாது. நிலுவை எதுவும் இல்லை என்பதற்கான சான்று பெறப்படுதல் வேண்டும். |
| 19 | எலம்/ஒப்பந்தப்புள்ளி முடிவுற்ற பின்பு ஏலம் எடுத்தவர் அண்மையில் எடுக்கப்பட்ட அவரது பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் நோட்டரி பப்ளிக்கின் சான்ற பெற்ற ஒப்படைத்தல் வேண்டும். ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் எழுதி ஒப்படைக்கப்படவேண்டும். |

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி

27/7/26

ஓசூர் மாநகராட்சி அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்

ந.க.எண். 0276/2024/அ3 நாள்: 27/07/2026

**தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 2023 பிரிவு 316ன் ( 4) (5) ன் கீழ் விளம்பரம் செய்யப்படுகிறது.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஓசூர் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய நகராட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று அடுக்குகள் கொண்ட புதிய வணிக வளாகம் SHOPPING COMMERCIAL COMPLEX MALL WITH 3 FLOOR–னை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விட உத்தேசிக்கப்பட்டு அட்டவணையில் குறிப்பிட்டுளள விவரப்படி ஒப்பந்தப்புள்ளி மூன்றாண்டு ஆண்டுக் குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விட இணைய தளம் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையாளரால் வரவேற்கப்படுகிறது. குத்தகை இனங்களுக்கு https://tntenders.gov.in என்கிற இணைய தளத்தின் மூலமாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் 13/08/2026–ம் தேதி காலை 11.00 மணிக்கு மாநகராட்சியின் மைய அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு அன்றே 13/08/2026–ம் தேதி ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

| வ. எண் | குத்தகை இன விவரம் | 1 மாத வாடகை தொகை | பொது ஏலம் ஒப்பந்தப் புள்ளி கோரும் போது செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகை (ரூ) | சொத்து மீதான அசல் சொத்து மதிப்பு சான்றிதழ் | சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாதவர்க செலுத்த வேண்டிய கூடுதல் முன் வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| **1. புதிய வணிக கட்டிடம் தரைத்தளம்–(GROUND FLOOR)** | | | | | |
| 1 | A–BLOCK | 6,06,146/– | 10,00,000/– | 10,00,000/– | 10,00,000/– |
| 2 | B–BLOCK | 6,72,771/– | 10,00,000/– | 10,00,000/– | 10,00,000/– |
| 3 | C–BLOCK | 377,895/– | 5,00,000/– | 5,00,000/– | 5,00,000/– |
| **2. புதிய வணிக கட்டிடம் முதல் தளம்–(FIRST FLOOR)** | | | | | |
| 1 | A–BLOCK | 6,06,146/– | 10,00,000/– | 10,00,000/– | 10,00,000/– |
| 2 | B–BLOCK | 5,67,204/– | 10,00,000/– | 10,00,000/– | 10,00,000/– |
| 3 | C–BLOCK | 3,77,895/– | 5,00,000/– | 5,00,000/– | 5,00,000/– |
| **3. புதிய வணிக கட்டிடம் இரண்டாம் தளம்–(SECOND FLOOR)** | | | | | |
| 1 | A–BLOCK | 6,06,146/– | 10,00,000/– | 10,00,000/– | 10,00,000/– |
| 2 | B–BLOCK | 5,67,204/– | 10,00,000/– | 10,00,000/– | 10,00,000/– |
| 3 | C–BLOCK | 3,77,895/– | 5,00,000/– | 5,00,000/– | 5,00,000/– |

ஆணையாளர்,
ஓசூர் மாநகராட்சி

27/7/26

Signature Not Verified

Digitally signed by DEVIPRASATH P
Date: 2026.07.29 17:10:25 IST
Location: Tamil Nadu-